மாயூரம் ஒன்றியம், நல்லத்துக்குடி பஞ்சாயத்தில் மனையற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நல்லத்துக் குடி கிராமத்தில் 32 அரிசனங்களுக்கு இலவச வீட்டுமனை வழங் கும் பொருட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியரின் செயற் குறிப்பை அரசு ஏற்று இதற்கான நில ஆர்ஜித சட்டத்தின் பிரிவு 4(1)-ன் முன் மொழிவு வெளியீட்டறிக்கையை தமிழ்நாடு அரசு 20—1—1978 தேதிய சிறப்பிதழில் வெளியிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மாயூரம் ஒன்றியம் நல்லத்துக்குடி பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் குடியிருப்பு மனை கோரி அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் ? இப்பொழுது வழங்கப்பட்டவர்கள் தவிர வேறு எத்தனைபேருக்கு வழங்க அரசு முயற்சி எடுக்க இருக்கிறது என்பதை அறிய விழைகிறேன்.

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, 32 பேர் விண்ணப்பித்துக் கொண்டனர். 32 பேருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அரசாங்கத்தால் இதுபோன்று தனியாரிடமிருந்து அரிசன மக்களுக்காக வீட்டு மனை இடங்கள் வாங்கப்பட்டு, தனிப்பட்ட முறையிலே, இது வரை பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே பல நூறு மக்கள் இவ்வாறு பெறாமல் இருக்கிறார்கள் இடங்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே, உடனடியாகப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவ ரவர்களே, எந்தெந்த ஊர், என்று பெயர்களைத் தருவாரானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எந்த ஊரைப்பற்றி மூலக் கேள்வி கேட்கப்படுகிறதோ, அந்த ஊரைப் பற்றித்தான் துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

295. வினா—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1978 பிப்ரவரி 27]

(அ) மாயூரம் தாலூகா 55-ம் எண் பட்டமங்கலம் வட்டம், அக்களூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு 1973-ம் ஆண்டு அரிசன நல இலாகாவின் மூலம் 52 பேருக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அவை ஒப்படை செய்யப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) 50 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக 1972-ம் ஆண்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டது.

(ஆ) 1973-ம் ஆண்டு இவர்களுக்கு மனைப்பட்டா வழங்கப் பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குறிப்பாக, மாயூரம் ஒன்றியப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதில் நெருக்கடி காலத்திலிருந்து தாமதம் ஏற் பட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடங்களுக்கான பட்டாக்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா ? அதனைத் தவிர்த்து, பட்டா வழங்க இனியேனும் அரசு வழிவகை காண முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மாயூரம் ஒன்றியம் முழுவதிலும் இப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கேள்விக்குப் பிறகு, குறிப்பாக, அறிகிறேன், அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், இந்த அரசாங்கம், உடனடியாக நடவடிக்கை எடுத்து பட்டா வழங்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

செய்யாறு பாலத்தில் சுங்க வசூல்.

*296 வினா—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செய்யாறு பாலம் கட்டி பத்து வருடங்களுக்கு மேலாகியும் சுங்க வரி வசூலிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இன்னமும் எத்தனை ஆண்டுகளுக்கு வசூல் செய்யப்படும் ?